**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4630

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.11.2021

Accepted: 23.12.2021

Published: 01.01.2022

Citation:
Adeline Jennifer, B., and Joe Jepamalar Vinces Manimala. "Feminist Thoughts in Subrabharathimanian Novels." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 91–96.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4630

*Corresponding Author:
jeniferedwin1989@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Feminist Thoughts in Subrabharathimanian Novels

**B. Adeline Jennifer**
*Ph.D. Scholar, (Part Time), Registration Number: 19131244022011*

**Dr. Joe. Jepamalar Vinces Manimala**
*Saral Thakkar College, Tirunelveli*
*Manonmaniyam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India*
http://orcid.org/0000-0003-3788-1537

**Abstract -** It can be said that there is no literature that does not depict women from the Sanskrit period to the present. They change with each passing season. At the same time as the changes are taking place, the female structure is facing many more ups and downs in the society. Women have a variety of problems, such as sexual problems, workplace problems, family problems, and domineering problems. The study is set to illustrate the way in which Subramanian deals with such situations in his novels.

**Keywords:** Tamil Novels, Feminist Thoughts, Literature, Sexual Problems Subrabharathimanian.

**References**

1. Subrabharathimanian, Samayalarai Kalayangal, Ethir Vezhiyeedu, Pollachi.
2. Subrabharathimanian, Sayathirai, New Century Book House, Chennai.
3. Subrabharathimanian, Neerthuzhigal, New Century Book House, Chennai.

# சுப்ரபாரதிமணியன் புதினங்கள் காட்டும் பெண்ணியச் சிந்தனைகள்

***பி. ஆட்லின் ஜெனிபர்***
முனைவர் பட்டஆய்வாளர் (பகுதிநேரம்)
பதிவுஎண் :19131244022011

***முனைவர் ஜோ. ஜெபமலர் வின்செஸ் மணிமாலா***
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*பெண்கள் சந்திக்கும் பாலியல் பிரச்சினைகள், வேலை பார்க்கும் இடத்தில் பிரச்சினைகள், குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் ஆணை சார்ந்துவாழும் பிரச்சினைகள் எனப் பலவகையில் பெண்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. அந்த மாதிரியான நிலைகளைச் சுப்ரபாரதிமணியன் தன்னுடைய புதினங்களில் எடுத்துரைக்கும் விதத்தினை விளக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.*
***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்ப் புதினங்கள், பெண்ணியச் சிந்தனைகள், இலக்கியங்கள், பாலியல் பிரச்சனைகள், சுப்ரபாரதிமணியன்.*

## முன்னுரை

சுப்ரபாரதிமணியன் பல, புதினங்களைப் படைத்துள்ளார். அவர் படைத்துள்ள புதினங்களில் பெண்ணியப் பிரச்சனைகளும், சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் முன்னேற்றமும் அடிநாதமாக அமைந்துள்ளன. குடும்பம் என்பது நிலைத்து இருக்க வேண்டுமெனில் பெண்ணானவள் ஆணைச் சார்ந்து தான் இருக்கவேண்டும் என்றும், ஆண் பெண் உறவுதான் குடும்பம் என்ற நிலையிலிருந்து சற்று விலகிப்போகும் சூழலையும் ஆசிரியர் சுப்ரபாரதிமணியன் படைப்புகளில் காணமுடிகின்றது. அந்த வகையில் சுப்ரபாரதிமணியன் புதினங்களில் பெண்ணியச் சிந்தனைகள் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை இக் கட்டுரை விளக்குகிறது.

## பெண்ணியச் சிந்தனையாளர்களின் நோக்கம்

பெண் என்பவள் எல்லா ஆண்களுக்கும் நிகரானவளாவாள். எக்காலத்திலும் எந்த நிலையிலும் அவளை அடக்கி வைக்கக் கூடாது என்பதே பெண்ணியவாதிகளின் கருத்தாகும். ஆண் மேலாதிக்கத்தின் வழிவழியாய் வந்த பண்பாட்டு அடிப்படையில், பெண்ணானவள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும், ஆண்களைச் சார்ந்து அவர்களின் "நலன் பேணுவதையே தன்னுடைய வாழ்வாகக் கொண்டிருக்கிறாள் என்றும், பெண்கள் தாமாகவே முடிவெடுத்து அவர்களின் விருப்பப்படி ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே பெண்ணியச் சிந்தனையாளர்களின் நோக்கும்.

தமிழ்ப் பண்பாட்டில் திருமணமான பெண்கள் பாலியல் பற்றி வெளிப்படையாகப் பேசுவது என்பது நாணமில்லாத செயலாகக்

கருதப்படுகின்றது. திருமணமாகாத பெண் ஒருத்தி பாலியல் பற்றிப் பேசுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று என்ற கருத்து சமுதாயத்தில் நிலவுகிறது.

சுப்ரபாரதிமணியன் “சமையலறைக் கலயங்கள்” என்னும் புதினத்தில் குறிப்பிடும் தகவல்கள் குறிப்பிடத்தக்கன. பெண்கள் பாலியல் உறவு வைத்துக்கொள்ளக்கூடாது என்ற கட்டுப்பாட்டை முன்வைத்துப் பிறப்பு உறுப்பு தைக்கப்படுவதாக இந்தக் கட்டுப்பாட்டால் பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத அளவுக்குப் பிறப்புறுப்பு சிதைக்கப்படுகின்றது. திருமணத்திற்குப் பிறகு கணவனோடு உறவு கொள்வதற்காக தைக்கப்பட்டுள்ள பிறப்புறுப்பில் சிறிது இடத்தை வெட்டியும், குழந்தை பிறக்கும் நேரத்தில் இன்னும் கூடுதலாக அந்த இடத்தை வெட்டியும் தைக்கப்படும் நிலை அந்நாட்டு மக்களிடம் இருந்து வருகின்றது. இதனால் பெண்கள் இறக்கும் நிலையும் உருவாகின்றது என்று எடுத்துரைக்கின்றார்.

## சமுதாயத்தில் குழந்தையில்லாத பெண்கள் நிலை

இல்லற வாழ்க்கையில் குழந்தைப்பேறு என்பது முக்கியமான ஒன்றாகும். குழந்தை பிறக்க இயலாத நிலையில் சமுதாயம் ஆணைவிட பெண்ணை மலடி என்று அழைக்கின்றது.

இதனைச் சுப்ரபாரதிமணியன் “சமையலறைக் கலயங்கள்” என்னும் புதினத்தில் சாந்தா என்னும் பெண் கதாபாத்திரம் குழந்தை இல்லாத காரணத்தினால் கணவனால் ஒதுக்கப்படுகின்ற சாந்தாவும் கம்பெனியில் வேலை பார்த்து வரும் மனைவியால் பொருளாதாரப் பிரச்சினையால் ஒதுக்கப்பட்ட கிருஷ்ணனும் என்ற கதாபாத்திரமும் ஒன்று சேர்கின்றனர். குடும்பச் சூழல் காரணமாக பிரிந்த இருவரும் தனிமையில் வாழ்கின்றனர். இவ்விருவரும் ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாகவும், உணர்வுகளை வெளிப்படுத்திக்கொண்டும் வாழ்ந்து வருகின்றனர். இவ்விருவரும் விட்டுக் கொடுத்து வாழலாம் என்ற எண்ணவோட்டத்தை சுப்ரபாரதிமணியன் பதிவாக்கியுள்ளார். குழந்தைப் பேறு இல்லாத பெண்களின் அவல நிலையை எடுத்துக்காட்டுகிறார்.

## கணவன் பாலுறவால் துன்புற்ற பெண்கள்

சுப்ரபாரதிமணியனின் “நீர்த்துளி” என்னும் புதினத்தில் கலா என்ற கதாபாத்திர பெண் குடிகார கணவனிடம் வாழமுடியாமல் வீட்டைவிட்டு வெளியேறி வந்துவிடுதியில் தங்குகிறாள். அங்கு பனியன் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்து, தன்னை விட வயது குறைந்த லிங்கம் என்பவனோடு பழக்கம் ஏற்படுத்திக் கொள்கிறாள். இவ்விருவரும் உறவுமுறைகளுக்குப் பயந்துகொண்டு யாருக்கும் தெரியாமல் வாழ்க்கை நடத்துகின்றனர். கலா முறைப்படி கணவனிடம் விவாகரத்து வாங்காமலும், லிங்கமும் தாலி கட்டாமலும் தற்காலிகமாக கணவன் மனைவி போல வெளியில் சொல்லிக்கொண்டு திருமண பந்தம் இல்லாமல் பாலியல் உறவுமட்டும் வைத்துக் கொண்டு வாழ்கின்றனர். இதனை, “குளிர் இருக்கும் நாட்கள் ரம்மியமானவை என்பாள் கலா. நல்ல மூடு வருமே என்பாள். நெருக்கத்தை அதிகமாக்கிக் கொள்வாள். நல்ல கட்டிப்புடிச்சுத் தூங்கலாம் என்று நெருங்கிக் கொள்வாள்” (நீர்த்துளி,ப.107 என்று நீர்த்துளி புதினத்தில் அவள் எடுத்துரைப்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

கலாவும் லிங்கமும் எதைப் பற்றியும் யோசிக்காமல் உடலின்பமும் மட்டுமே மகிழ்ச்சியைத் தரும் என்ற நோக்கத்தோடு இருவரும் புணர்ந்து துய்க்கும் நிலையைக் காணமுடிகின்றது. அந்த உறவும் நீடிக்கவில்லை. மறைந்து தன்னை முழுமையாக வெளிக்காட்டாமல் வாழ்வது சலிப்பைத் தருகின்றது. இது போன்ற உணர்வுடையவர்கள் சமுதாயத்தில்

தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு வாழ்வதை அறிய முடிகின்றது.

**பாலியலில் தொல்லையால் பாதிக்கப்படும் பெண்கள்**

பாலியல் உணர்வு இயற்கையானது. அவ்வியற்கை இன்பத்தை வெளிப்படுத்த நினைக்கும் போது தடைகள் ஏற்படுகின்றன. அச்சமயத்தில் அத்துமீறல்கள் நிகழ்கின்றன. அந்தவகையில்,

**"காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ"**
***(நற்.39.3)***

என்ற நற்றிணைப் பாடலடி காமம் என்பது எல்லை கடந்துமிகுமாயின் அதனைப் பொறுத்துக்கொள்ளுதல் எளிதல்ல என்கிறது.

சுப்ரபாரதிமணியன் "ஓடும் நதி" என்னும் புதினத்தில் செல்லம்மிணி என்ற பெண் கதாபாத்திரம் மாதவிடாய்க் காலத்தில் வயிற்று வலியால் வீட்டில் படுத்திருக்கிறாள். அந்த நேரம் பேப்பர் வாங்கும் ராஜேஸ் என்பவன் வீட்டிற்குள் புகுந்து செல்லம் மிணியைப் பாலியல் வன்புணர்வு செய்கிறான். இச்செய்தியானது அவளது தந்தைக்குத் தெரிந்து யாரிடமும் சொல்லக்கூடாது என்று மறைக்கப்படுகின்றது.

அவள் வேலைப் பார்க்கும் கம்பெனியில் சொக்கன் என்பவரோடு காதல் ஏற்படுகின்றது. அந்நிலையில் இருவரும் ஊரைவிட்டு சென்று மொழி தெரியாத இடத்தில் வேலை செய்து வாழ்கின்றனர். இந்நிலையில் சொக்கனின் அப்பாவிற்கு உடல் நலம் சரியில்லை என்ற காரணத்தால் அவன் செல்லம்மிணியைத் தனியே விட்டு விட்டு ஊருக்கு வந்துவிடுகிறான். தனிமையில் இருக்க முடியாமல் செல்லம்மிணியும் ஊருக்கு வந்து தன் அப்பா சொன்ன ரங்கண்ணன் என்ற கால ஊனமான ஒருவனுக்குத் திருமணம் செய்துகொள்கின்றாள். அவனோ பாலுணர்வு சிறிதும் இல்லாதவனாக உள்ளான். அந்த நிலையில் ஜெயபால் என்ற வழக்கறிஞரின் உறவு செல்லம்மிணிக்குக் கிடைக்கின்றது.

**"மனசுகூட காலியாகத் தான் கிடந்தால் நன்றாக தான் இருக்கும். ஜெயபாலுடன் ஏதாவது குறுமலைக்குச் சென்று காற்றை உள்ளிழுக்கும்போது மனம் காலியாவது போலிருக்கும். அவளுக்கு ராஜேஸ்குமாரை முழுவதும் துடைத்தெறிந்து விட்டால் காலியாகும். சொக்கனின் நினைப்பு இப்படி துடைத்தெறிந்து விட்டது போல தான். கனவு என்று சொல்வார்களே அது போல கனவு கண்டது விடிந்த பின் நினைவில்லாமல் போகும்" *(ஓடும்நதி, ப.266)***

என்று செல்லம்மிணி தன் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகளை வெளிக்காட்டுகிறாள்.

பெண் நிலைத்த வாழ்க்கை அமையாமல் நதிபோல ஓடிக்கொண்டு இருக்கிறாள். நதியானது இறுதியில் கடலில் கலப்பது போல, சுற்றுச்சூழல் வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் நொய்யல் ஆற்றோரப் பகுதிகளில் வேப்ப முத்துக்களை நடுகின்றவளாக செல்லமிணியைச் சுப்ரபாரதிமணியன் படைத்துள்ளார். வாழ்க்கை சீரழிந்த நிலையில் நாட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ள பெண்கள் முயலுவதாகச் சுப்ரபாரதிமணியன் வார்த்துள்ளார்.

**திருமணமான பெண்களுக்கான இடர்பாடுகள்**

பெண்கள் திருமணம் செய்துகொண்டாலும், செய்துகொள்ளவில்லை என்றாலும், இச்சமூகத்தால் அவர்கள் அடையும் துன்பம் மட்டுமே நிரந்தரமானது என்பதைச் சுப்ரபாரதிமணியன் எடுத்துக்காட்டி உள்ளார்.

திருமணம் என்பது பெண்கள் வாழ்க்கையில் ஆயுள் தண்டனையாக அமைந்து விடுகின்றது. ஆண், பெண் வாழ்க்கையில் அன்போ, காதலோ இல்லை. மணவிலக்கு கிடைக்காத பெண்ணின் வாழ்வு எவ்வாறு மாறுகின்றது

என்பதை, நீர்த்துளி புதினத்தில் கலாவின் பாத்திரம் வெளிப்படுத்துகின்றது.

“அவன் வார்த்தைகள் துரோகம் சாதாரணம். என்னைக் கொடுமைப்படுத்தனும், அவனுக்குத் தேவையான பொண்ணுகளோடு இருக்கிறத கண்டுக்கக் கூடாதுஅவ்வளவு தான் அதுக்கும் தடைன்னு நீ நினைக்கல. ஆனா, எல்லாம் ஓவராய் போச்சு. எல்லா ஆம்பிள்ளைங்ககிட்டேயும் இருக்கிற திமிர். அந்ததிமிர் எப்போ ஆம்பளைகிட்டே இருந்துவெளிப்படும்னு யாருக்குத் தெரியும். லேட்டஸ்டா அந்த ஆள் சொல்றது என்ன தெரியுமா? நீயாரையாச்சும் வெச்சுக்கலாமகண் காணாம். அரசல் புரசலாக இருந்துக்கலாம். ஆனால் எவனையும் கல்யாணம் பண்ணவிடமாட்டேன். விவாகரத்தும் தரமாட்டேன்” (நீர்த்துளி. ப.31) என்று கூறும்போது ஆணாதிக்கம் வெளிப்படுவதை ஆசிரியர் வழி நின்று அறிய முடிகின்றது. தன் கணவனிடமிருந்து விவாகரத்து வாங்க முடியாமலும், அவளால் வேறொரு வாழ்வை சமுதாயத்தின் பார்வையில் பார்வையில் தலை நிமிர்ந்து வாழமுடியாமலும் இருக்கிறாள். கலா தன்னுடைய கணவனிடம் பட்ட கொடுமைகளையும் நினைத்துப் பார்க்கிறாள்.

“அந்த ஆளுக்கிட்டபட்ட அடி சொல்லிமாளாது. தப்தப்புனு அடிச்சுட்டே இருப்பான். முகம் வீங்கிப்போகும். எல்லாத்து மேலயும் சந்தேகம். நீ யார்கிட்டே பேசறே அவன் யார்.. இவன் யார் நீ பெரிய அழகின்னு நினைப் போன்னு அடி வுழுந்திட்டே இருக்கும்” (நீர்த்துளி. ப.57) என்று கூறுவதால் கலா பட்ட துன்பங்களையும், துயரங்களையும் தன் கணவனால் பட்ட வேதனைகளையும் சுப்ரபாரதிமணியன், தன் புதினங்களில் எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது.

சமையலறை கலயங்கள் என்னும் புதினத்தில் ஆண்கள் பெண்களை அடக்கி ஒடுக்கி வாழவைக்கும் நிலையில் உள்ள ஆணாதிக்கம் மிக்க மனிதர்களாக உள்ளதைப் பதிவாக்கியுள்ளார்.

சாமியப்பன் தன்னுடைய மனைவி ஜோதிலட்சுமியைப் பிரிந்து சென்று வாழக்கூடியவர். அவன் பல பெண்களுடன் உறவுவைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக வாழக்கூடியவன். அந்த நிலையில் புதிதாக வந்த ஒருபெண் அவனுக்கு இணங்கவில்லை என்பதால் அவளை, “காசுக்கு ஆசைப்பட்டு வந்துன்னா சொல்லீரு, காசை வாங்கிட்டுப் போ என்னை சிரமப்படுத்தாதே” (சமையலறைக் கலயங்கள், பக்.31) என்ற கூற்று சாமியப்பனின் அதிகாரத் தன்மையை எப்பொழுதும் பெண்களிடம் வெளிக்காட்டக் கூடிய ஆணாக இருப்பதை சுப்ரபாரதிமணியன் தன்னுடைய புதினத்தில் பதிவு செய்துள்ளதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

இக்கட்டுரையில் சுட்டப்பெறும் பெண்கள் அனைவரும் பாலியல் தொல்லை, கணவனால் சிக்கல், குழந்தையில்லாத சிக்கல், வறுமையினால் புலம் பெயர்ந்து சென்ற பெண்களின் நிலை, முறையற்ற, நிலையற்ற உறவு நிலை, அதனால் வரும் சிக்கல்கள், பெண்களுக்கு பாலியல் வன்புணர்வு போன்றவற்றால் இருபாலரும் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும், ஒட்டுமொத்த நிலையும் பாலுறவை மையமிட்டே நிகழ்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், வறுமையின் காரணமாக வேலை அவசியம் என்ற நிலையிலும் சீண்டலுக்கு ஒத்துப் போகப் பெண்கள் தள்ளப்படுவதைப் புதினங்களின் வழி அறியமுடிகின்றது. பெண்களின் அச்ச உணர்வும், அடங்கிப் போகும் குணமும்,

தவறை அம்பலப்படுத்தத் தயக்கம் காட்டுவதாலும் இச்செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதைப் புதினங்களின் மூலம் அறிய முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

1. சுப்ரபாரதிமணியன். சமையலறைக் கலயங்கள். பொள்ளாச்சி, எதிர் வெளியீடு.
2. சுப்ரபாரதிமணியன். சாயத்திரை. சென்னை, நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ்.
3. சுப்ரபாரதிமணியன். நீர்த்துளிகள். சென்னை, நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ்.